சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் தி.நகர் கிழக்கு – மேற்கு மற்றும் மயிலாப்பூர் கிழக்கு – மேற்கு பகுதியை சேர்ந்த அனைத்து இளைஞரணி நிர்வாகிகளுக்கும் 2026 திராவிட பொங்கல் விழாவை முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன்.எம்.சி தலைமையில் நடைபெற்ற விழாவில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்எல்ஏ பொங்கல் பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் ஜெ.கருணாநிதி எம்எல்ஏ, கே.ஏழுமலை எம்.சி, எஸ்.உமாசங்கர், தினேஷ்மாணிக்கம், த.விக்னேஷ்வரன், எ.அஸ்வின்குமார், க.அருன்குமார், க.மணிகண்டன், ஆ. மணிரத்தினம், டி.ஜெகதீஷ் மற்றும் கழகத்தினர் கலந்துகொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி", தமிழ்நாடு தலைகுனியாது பாக பரப்புரை மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிவுறுத்தலின்படி, பன்பாக்கம் ஊராட்சி பூத் எண்:142,143–ல் நடைப்பெற்றது இதில். ஒன்றிய கழக செயலாளர் கும்முடிப்பூண்டி கி.வேணுஆனந்த் வீடு வீடாக சென்று திமுக செய்த சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் உடன் ஒன்றிய நிர்வாகிகள் மங்களம் ஜெ.சுரேஷ் , துர்கா வெங்கடேசன், ஜி.பி. வெங்கடேசன், வழக்கறிஞர் மெதூர் சுரேஷ், ஏ.ஜோதி ஏகநாதன் கழக நிர்வாகிகள் பாக உறுப்பினர்கள் உள்ளனர்

சென்னை : மாநகர போக்குவரத்துக் கழகத்துக்கு உலக வங்கி பாராட்டு!

மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது!

சென்னை, ஜன.10-

சிறந்த பொது போக்கு வரத்து அமைப்பை கொண்ட நகரம் என்ற விருதை பெற்றுள்ள சென்னை மாநகர போக்கு வரத்துக் கழகத்திற்கு உலக வங்கி பாராட்டுத் தெரிவித் துள்ளது.

உலக வங்கி வெளி யிட்டுள்ள செய்திக்குறிப் பில், சென்னை மாநகர போக்குவரத்துக் கழக பேருந்துகளை தினமும் 35 லட்சம் பேர் பயன்படுத்து வதாகவும், காற்று மாசை குறைக்கும் வகையில் ஆயி ரத்துக்கும் மேற்பட்ட மின் சாரப் பேருந்துகள் செயல் பாட்டில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. திட்டமிடுதல், ஒப்பந்தம் செய்தல், தனியார் பங்க ளிப்பை உரிய வகையில் பயன்படுத்துதல் உள் ளிட்ட நடவடிக்கைகளின் மூலம், சென்னையில் 3 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட தற்போது பொது போக்குவரத்தை பயன்படுத்துவோரின் எண் ணிக்கை கணிசமாக அதிக ரித்துள்ளதாகக் குறிப்பிட்டு ள்ள உலக வங்கி, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் சிறப்பான சேவை, இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கும் வழி காட்டுவதாக பாராட்டி யுள்ளது.

விடியல் பயணம், பள்ளி மாணவர்களுக்கான இலவச பேருந்து பயணம் உள்ளிட்டவற்றால் ஒவ் வொரு குடும்பமும் மாதந் தோறும் 2 ஆயிரம் ரூபாய் வரை சேமிக்கின்றன. 100 சதவீதம் இ.டிக்கெட், ஜி.பி.எஸ். டிராக்கிங், சென்னை ஒன் செயலி என சென்னை மாநகர போக்கு வரத்துக் கழகம் டிஜிட்டல் முறையில் இயங்கி வருகி றது. அனைத்துத் தரப்பு மக் களும் பயன்படுத்தும் போக்குவரத்து சேவை யாக சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் மாறியுள்ளதாகவும், இல வச பேருந்து பயணங்கள் வழங்குவதோடு, பொரு ளா தாரத்திலும் தன்னிறைவு பெற்றுள்ளதாகவும் தெரி வித்துள்ள உலக வங்கி, சென்னை மாநகர போக்கு வரத்துக் கழகத்தின் இந்த சாதனை, சென்னை மாநக ரம் பெருமை கொள்ளத் தக்க ஒரு அங்கீகாரம் என பாராட்டு தெரிவித்துள் ளது.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை பங்கேற்பு!

132 “அ” வட்டத்தில் கழகத்தினருக்கு திராவிட பொங்கல் பரிசு!

வட்டச் செயலாளர் கே.எஸ். வெல்டிங்ராஜா அறிக்கை!

சென்னை, ஜன.10

தியாகராயர் நகர் 132 (அ) வட்டகழக செயலா ளர், கே.எஸ்வெல்டிங் ராஜா அறிக்கை வரு மாறு:-

சென்னை தென் மேற்கு மாவட்ட தியாகராய நகர் மேற்கு பகுதி 132 “அ” வட் டத்தில் கழகத்தினருக்கு திராவிட பொங்கல் புத் தாடை வழங்கும் விழா

என்12/29. சக்கரபாணி தெரு விரிவு மேற்கு மாம்ப லம் சென்னை 33ல் உள்ள மாமன்ற உறுப்பினர் அலு வலகத்தில் 11/01/2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 11 மணி அளவில் தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி. தலைமை யில் சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை. த.வேலு எம்.எல்.ஏ. தியா கராயர் நகர் மேற்கு பகுதி கழகச் செயலாளர் கே.ஏழு மலை.MC தலைமை செயற் குழு உறுப்பினர் கோசு ம ணி . EX.MC,தியாகராயநகர் தொகுதி பார்வையாளர் திருமதி. ரத்னாலோகேஸ் வரன்.MC திருமதி. பா. கார்த்திகாபாஸ்கர்.MC ஆகியோர் முன்னிலையில் வழங்குகின்றார் எனவே இந்த நிகழ்ச்சியில் வட்டத் திற் குட்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், இளை ஞர் அணி, மகளிர் அணி சுற்றுச்சூழல் அணி ,மகளிர் தொண்டர் அணி, வழக்க றிஞர் அணி, ஆதிதிராவி டர் அணி, இலக்கிய அணி, மாணவர் அணி, வர்த்தக அணி, தொண்டர் அணி, சிறுபான்மை ராணி, பொறியாளர் அணி, தக வல் தொழில் நுட்ப அணி, தொழிலாளர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள்,பாக முகவர்களின் அணி, தொ.மு.சா தொழிலாளர் தொழில் சங்கம் கழகத் தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கழக முன் னோடிகள் அனைவரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

குன்றத்தூர் ஒன்றியம் வரதராஜபுரம் ஊராட்சியில் தமிழக அரசின் பொங்கல் பரிசு தொகுப்பினை காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் பட்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதிமனோகரன் பொதுமக்களுக்கு வழங்கினர்.உடன் ஒன்றிய பொறுப்பாளர் இ.மணி, ஊராட்சி மன்ற தலைவர் மு.செல்வமணி மற்றும் தி.மு.க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி30 அ வார்டில் விநாயகபுரம் உமாபதி நகர் லட்சுமிபுரம் செகரட்டரியட் காலனி . கல் பாளையம் ஆகிய பகுதியில் உள்ள நியாய விலை கடைகளில் தமிழக அரசின் பொங்கல் தொகுப்பு பொருட்கள் பரிசுத்தொகை வில்லிவாக்கம் துணை ஆணையர் அமுதவல்லி தொடங்கி வைத்தார். உடன் வட்ட செயலாளர் டி.சுந்தரம், இராமன், எஸ்.பி.கண்ணன், பி.வி.ராஜு, சி.பரமேஸ்வரி, அபிப்ரஹ்மான், எஸ்.என்.ராஜி, எம்.சீனிவாசன், பிஎஸ்என்எல் தயாளன், சி.உமா மகேஸ்வரி, விக்னேஷ், வெற்றிவேல், செண்பக லட்சுமி, இசைவாணன், செண்பகராஜ், மோகன் தாஸ், கவிப்பிரியா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

திருப்பத்தூர் மாவட்டம்

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் செயலாளர் ஒப்புதலோடு திருப்பத்தூர் மாவட்டம் மறுசீரமைக்கப்பட்டதால் ஏற்கனவே கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்ட சி. குணசேகரன் அவர்கள் வேலூர் தெற்கு மாவட்ட நிர்வாகத்தில் வருவதால் அவருக்கு பதிலாக **ம. பிரபு** (1/117, அண்ணா நகர், குருசிலாப்பட்டு கிராமம் மற்றும் அஞ்சல், திருப்பத்தூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் - 635702) அவர்கள் திருப்பத்தூர் மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளராகவும்,

ஏற்கனவே கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ஆம்பூர் பொய்யமொழி மறைவெய்திய காரணத்தினால், **கு. கலைமூர்த்தி** (தாமலேரிமுத்தூர் கிராமம் மற்றும் அஞ்சல், திருப்பத்தூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் - 635853) மற்றும் **சி. ஆனந்தன்** (6/17, நாயணசெருவு கிராமம் மற்றும் அஞ்சல், நாயணசெருவு ஊராட்சி, நாட்றம்பள்ளி தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் - 635852) ஆகியோர் திருப்பத்தூர் மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

தஞ்சை தெற்கு மாவட்டம்

தஞ்சை தெற்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் கா.பழனிவேல் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **ஆர்.பாலா (எ) பாலமுருகன்,** எம்.பி.ஏ., (85-ஏ, பெருமாள் கோவில் தெரு, பட்டுக்கோட்டை, தஞ்சை மாவட்டம் - 614 601.) அவர்கள் தஞ்சை தெற்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 08-01-2026.

வாகை சந்திரசேகர்
தலைவர்
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்ட பொறுப்பாளர் ஒப்புதலோடு, தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை திருப்பூர் கிழக்கு மாவட்டம் மற்றும் தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

திருப்பூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் - தி. சேகர் 55, திரு.வி.க. தெரு, சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - என். அரவிந்தன் 8/9, கந்தசாமி பாளையம், நஞ்சைதலையூர், தாராபுரம் - 639202, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - நா. மயில்சாமி 16/8, சந்திராபுரம், சடைய பாளையம் அஞ்சல், குண்டடம் - 638702, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) முனைவர் எஸ். செல்லத்துரை 5-ஐ, அறிவொளி நகர், மூலனூர் - 638106, திருப்பூர் மாவட்டம். 2) எஸ். சுகந்தி 134, நாச்சிபாளையம், மூலனூர் அஞ்சல் - 638106, தாராபுரம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம். 3) மு. நிதேஸ்குமார் 45ஏ, கச்சேரி வலசு, வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம். 4) பெ. தேசியன் 28, திருப்பூர் ரோடு, தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம். 5) சங்கர் (எ) எ. தியாகராஜ் 2/64-1, மேற்கு வீதி, நத்தக்காடையூர், காங்கேயம் - 638108, திருப்பூர் மாவட்டம்.

தஞ்சை வடக்கு மாவட்டம்

கும்பகோணம் மாநகரம்

தலைவர் - எஸ். அசோகன், 40-97, எலுமிச்சங்காபாளைய மேல தெரு, தாராசுரம், கும்பகோணம் - 612702, தஞ்சாவூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - கோ. அசோகன் 25/38, ரெட்டிராயார் அக்ரஹாரம், 5வது தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

அமைப்பாளர் - குவைத் பி. ஸ்ரீதர் 38/12ஏ, காடுவெட்டித் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். செந்தில்குமார் 44, காவேரி குடியிருப்பு, பாணாதுறைபத்துகட்டுத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) விக்கீஸ் சு. சரவணன் 17/12, சீத்தா தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) பி. பாலதண்டாயுதம் 81/45, வீரபாண்டிய கட்டபொம்மன் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4) வி. இராமதாஸ் 1/934, யானையடி அய்யனார் கோவில் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 5) து. மகேந்திரன் 35, சிங்காரம் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 08-01-2026.

வாகை சந்திரசேகர்
தலைவர்
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் தலைமை! ஆர்.சீனிவாசன் ஏற்பாடு! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை!

47(அ) வட்டத்தில் சமத்துவ பொங்கல் விழா!

ஆர்.டி.சேகர் துவக்கி வைக்கிறார்! கலாநிதி வீராசாமி - பங்கேற்பு!

எம்.பி.ஆர்.ராஜன் - இ.மணிமேகலை வரவேற்புரை!

சென்னை, ஜன.10

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 47(அ) வட்ட திமுக சார்பில் தமிழர் திரு நாள் தை பொங்கல் விழாவை முன்னிட்டு மாபெரும் சமத்துவ பொங்கல் திருவிழா கர காட்டம் மயிலாட்டம் ஒயிலாட்டம் காளையாட் டம் தாரைதப்பாட்டம் ஆகியவை நாளை (11.01.2026 ஞாயிற்றுக்கி ழமை) மாலை 3.00 மணிய ளவில் பாரதிநகர் மெயின் தெரு, கொருக்குப் பேட்டை, செ21ல் நடை பெறுகிறது.

வட்ட துணைச்செய லாளர் ஆர்.சீனிவாசன் நிகழ்ச்சிகான ஏற்பாட் டினை செய்துள்ளார்.

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ்பாண்டியன் தலைமை வகிக்கிறார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, முன் னிலை வகிக்கிறார்.வட்ட செயலாளர் எம்.பி.ஆர். ராஜன், இ.மணிமேகலை எம்.சி, ஆகியோர் வரவேற் கின்றனர்.

சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., நிகழ்ச்சியை துவக்கி வைக் கிறார்.

டாக்டர் கலாநிதி வீரா சாமி எம்.பி, பகுதிச் செய லாளர் இரா.லட்சுமணன், ஆர்.வி.லோகேஷ், மாஸ். டி.வெங்கடேசன், எம். கோவிந்தராஜ், எம்.லோக நாதன், டி.திராவிட செல்வி, பி.சீனிவாசன், பாலு(எ)முகமதுஅலி, ரா. ராபர்ட், ஜெ.அருணா, க. முருகன், பாரதி மு.கும ரன், ஜி.என்.ராகவேந்திரா, க.சுந்தரராஜன், பெ.வெங் கடேசன், பி.ஜக்கரய்யா, என்.மருதுகணேஷ், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, நேதாஜி யு.கணேசன், ஏ.டி.மணி, டாக்டர் வை. கலைவாணன், ஏ.மோகன், எஸ்.எம்.பரசுராமன், எம். விமலா, இர.பொன்இள வரசன், இ.ரவிக்குமார், ப.சோமசுந்தரமூர்த்தி, கவி ஞர் எம்.சுல்தான், ஜி.ஏழு மலை, எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.எ.எம்.சசி குமார், கே.கோதண்டன், ஜி.ராஜா, மீஞ்சூர் முகுந் தன், கே.ஜானகிராமன், எஸ்.ஜான்கென்னடி, டி.சங்கர், ஏ.தனசேகர், எஸ்.தமிழரசன், எஸ்.பாஸ் கர், எஸ்.எஸ்.மணி, டி. கே.ரத்தினகுமார், என். பி.அஜித், என்.சுப்புராயன், எஸ்.எம்.அப்துல்ரஹ் மான், எஸ்.பொன்ராஜ், எம்.சுசிலா, எ.கே.பால் சாமி, எம்.ஆர்.பி.பழனி, என்பீல்டு துரைராஜ்,

மு.ரவி, பெ.ராம்குமார், அம்பேத் எம்.தியாகு, ஜெ.கண்ணியம்மாள், ஸ்டீல் ஏ.மோகன், எம். குப்புசாமி, டைகர் பி.எஸ். வீரா, எம்.வீரதிலகம், ஜி.லட்சுமணன், ஏ.அமுலு, வி.கார்த்திக், எஸ்.வி.ரவி, ஜெ.அருணா, க.ரேணுகா, எம்.பி.அஜித், ஜி.என்.ராக வேந்திரா, சாமி(எ) குப்பு சாமி, க.செல்வி, பி.தீபக், கே.பத்மாவதி, டி.கலைய ரசி, குமுதவள்ளி, ஆர்.நாக ராஜ், என்.மதன், கே.கவிய ரசன், என்.நரேஷ்குமார், டி.அஜித், வி.ஐயப்பன், எஸ்.வி.சீனிவாசன், எஸ். பூரணகுமார், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

கா.சுந்தரராஜன், பெ.வெங்கடேசன், கே.அருண்குமார், ஆகி யோர் நன்றி கூறுகின்றனர்.

திருவாரூர் மாவட்ட

தி.மு.க. முன்னாள் துணை செயலாளர் என்.பி.பக்கிரிசாமி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி! இன்று இறுதி ஊர்வலம்!

திருவாரூர், ஜன.10

திருவாரூர் மாவட்ட தி.மு.க. முன்னாள் துணை செயலாளரும், திருத் துறைப்பூண்டி முன்னாள் நகர மன்ற தலைவரும் , தி.மு.க. மாவட்ட இலக்கிய அணி முன்னாள் துணைத் தலைவருமான என்.பி. பக்கி ரிசாமி அவர்கள் மறை வெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாருக்கு வயது 82.

மறைந்த என்.பி.பக்கிரி சாமி அவர்கள் மின்வாரிய தொழிற்சங்க பொறுப்பி லும், திருத்துறைப்பூண்டி நகர்மன்ற தலைவர் பொறுப்பிலும், இலக்கிய

அணி மாவட்ட துணை தலைவர் பொறுப்பிலும் திறம்பட பணியாற்றியவர்.

மறைந்த என்.பி.பக்கிரி சாமி அவர்களின் மறை வின் தகவல் அறிந்த மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அர சின் சிறப்பு பிரதிநிதி எ. கே.எஸ்.விஜயன், செயலா ளர் ஆர்.எஸ்.பாண்டியன் , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.ஆடலரசன் உள்ளிட்ட கழக நிர்வாகி களும், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் மற் றும் கிளை, வார்டு கழக நிர்வாகிகளும், கழக தோழர்களும் அன்னா ருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர் வலம் திருத்துறைப்பூண்டி மன்னார்குடி சாலையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று (10.01.2026 சனிக்கிழமை) மாலை 4 மணி அளவில் நடைபெறும்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அண்ணா நகர் தொகுதிக்கு உட்பட்ட பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு பொருட்களை சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன் ஏற்பாட்டில் 100 அ வார்டில், பொதுமக்களுக்கு வீட்டு உபயோக பொருட்கள் அடங்கிய தொகுப்பை வீடு வீடாக சென்று பொதுமக்களுக்கு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் ச.பரமசிவம் மாமன்ற உறுப்பினர் வசந்தி பரமசிவம், வட்டக் கழக செயலாளர் பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.